1982 மார்ச் 9]

சென்னையிலிருந்து கரூருக்கு பெரம்பலூர் வழி செல்கிற அந்த வழித்தடத்தில் சொகுசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இப்போது ஓடுகின்ற பேருந்துகளே சொகுசுப் பேருந்துகளாகத் தான் இருக்கின்றன. இன்னும் சொகுசுப் பேருந்துகள் வேண்டுமென்று சொன்னால், அதை எப்படி என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. செமி டீலக்ஸ், டீலக்ஸ், சூபர் டீலக்ஸ் என்றிருக்கிறது; இதிலே எதைக் கேட்கிறார்கள்? எனவே, தனியாக எந்தெந்த வழிகளில் எப்படிப்பட்ட பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதற்கேற்ப அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கட்டிடம்,

* வினா எண். 438— திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்— கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் ஈரோடு நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டிடம் ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) தெரியும்.

(ஆ) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்றும் சில வருவாய்த்துறை அலுவலகங்களுக்குத் தேவையான கட்டிடத் தொகுதி ஒன்றினை சுமார் 169 இலட்சம் செலவில் ஈரோடு— பெருந்துறை சாலைக்கு தென்புறமுள்ள சூரம்பட்டி கிராமம் சர்வே எண். 113 மற்றும் 114-ல் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி முன்பே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாகிறது. என்ன காரணத்தாலோ மாவட்ட ஆட்சியாளர் கட்டிடம் கட்டப்படாமல் காலதாமதமாகிறது. இந்த ஆண்டு, அந்தக் கட்டிடத்தைக் கட்டி நிறுவப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 9

மாண்புமிகு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டிடம் கட்டுவதற்கான ஆணை 24—3—80ல் பிறப்பிக்கப்பட்டு, மேற்படி கட்டிடத்தை கோட்டாட்சி அலுவலகம் ஈரோடு மையப் பகுதியில் கட்ட வேண்டுமென்று முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டது. அது நெரிசல் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே மேற்கொண்டு கட்டிடம் கட்டினால், இன்னும் அதிக நெரிசல் ஏற்படும் என்று கருதிய காரணத்தினால், இப்போது அந்த இடம் மாற்றப்பட்டு, அங்கே கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டு வருகிற கட்டிடம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு தனியாக கட்டப்பட்டு வருகிறதா? அல்லது வேறு அரசு அலுவலகங்கள் அதிலே இயங்குகின்ற அளவில் சேர்த்துக் கட்டப்படுகிறதா? அவ்வாறு கட்டப்படுமானால், எந்தெந்த துறைகள் அந்தக் கட்டிடத்தில் இயங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாகக் கட்டப்படும் அந்தக் கட்டிடத்தில், (1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (வருவாய்த் துறை), (2) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் (அபிவிருத்தி பிரிவு), (3) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின் தங்கிய வகுப்பினர் நலப் பிரிவு, (4) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் ஆதி திராவிட நலப் பிரிவு, (5) மாவட்ட உணவு வழங்கு அலுவலர், ஈரோடு, (6) கோட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (7) சமூக நல அலுவலர் அலுவலகம், ஈரோடு, (8) சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்ட அலுவலகம், (9) கோட்ட அபிவிருத்தி அலுவலர் அலுவலகம், ஈரோடு, (10) நில அளவு உதவி இயக்குநர் அலுவலகம், (11) வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு, (12) மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (செய்தி, மற்றும் பொதுமக்கள் தொடர்பு) ஆகிய 12 அரசு அலுவலகங்கள் அங்கே இயங்கும்.

கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்யும் திட்டம்.

*வினா எண். 439— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர் ரகங்களில் பாலியெஸ்டர் நூல் கலந்து நெசவு செய்தது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?